துணைப் பிரதமர் வோங் வலியுறுத்து

# சமூக, குடும்பக் கண்காணிப்பு முக்கியம்

தனிப்பட்டவர்கள் சுயமாகத் தீவிரப் போக்கை வளர்த்துக் கொள்ளாமல் தடுப்பதில் சமூகத்திற்கும் குடும்பத்திற்கும் முக்கிய பங்கிருப்பதாகத் துணைப் பிரதமரும் உள்துறை அமைச்சருமான வோங் கான் செங் நேற்றுக் கூறினார்.

உள்நாட்டுப் பாதுகாப்புத் துறை அண்மையில் மூவருக்கு எதிராக நடவடிக்கை எடுத்ததாகச் சென்ற வாரம் வெளியான செய்தி பற்றி சமூக நிகழ்ச்சி ஒன்றில் செய்தியாளர்கள் திரு வோங்கிடம் கேள்வி எழுப்பினர்.

"இணையத்தளங்களில் தகவல் சேகரித்து, பாதுகாப்புக்கு மிரட்டலாகத் தலையெடுக்கும் தனிப்பட்டவர்களை அடையாளம் காண்பது அரசாங்கம் அல்லது அதிகார அமைப்புகளின் பொறுப்பு மட்டுமல்ல. சமூகமும் விழிப்புடன் கண்காணிக்கவேண்டும்," என்றார் திரு வோங்.

"குடும்பத்தினரும் விழிப்புடன் இருக்கவேண்டும். குறிப்பாக, சக குடும்ப உறுப்பினர்கள் தங்கள் எண்ணங்களை வெளியிடும்போது.

"சுயமாகத் தீவிரப் போக்கை வளர்த்துக் கொள்ளும் தனிப்பட்டவர்களை அடையாளம் காண்பது சிரமம் என்றாலும், சில அறிகுறிகள் அவர்களைக் காட்டிக்கொடுக்கும்," என்றும் அமைச்சர் சொன்னார்.

"எங்களுக்குத் தெரியவந்த சில சம்பவங்களில், குடும்ப உறுப்பினர்களுக்கு உண்மையில் தெரிந்திருந்தது.

"குடும்ப உறுப்பினர்களில் சிலர் இத்தகைய கருத்தை வேடிக்கையாக எடுத்துக் கொள்கின்றனர் அல்லது ஒரு பொருட்டாகக் கருதுவதில்லை.

"இதனால், அந்தத் தனிப்பட்ட குடும்ப உறுப்பினரின் நடத்தையும் போக்கும் தொடர்கிறது. எனவே, குடும்ப உறுப்பினர்கள் கவனத்தில் கொள்வது முக்கியம்," என்று திரு வோங் விளக்கினார்.

ஆனால், கவனத்தில் கொள்வது மட்டும் போதாது. இத்தகைய சம்பவங்களைக் குடும்பத்தினர் புகார் செய்து உதவி நாடவேண்டும்.

இருபது வயது தேசிய சேவையாளர் முகம்மது ஃபாடில் அப்துல் ஹமீது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டதாகவும், மேலும் இருவருக்குக் கட்டுப்பாட்டு உத்தரவு விதிக்கப்பட்டதாகவும் உள்துறை அமைச்சு சென்ற வாரம் அறிவித்ததைத் தொடர்ந்து, திரு வோங் இவ்வாறு கருத்துரைத்தார்.

நாடு எதிர்நோக்கும் பாதுகாப்பு மிரட்டல்களையும் சிங்கப்பூரர்களுக்கு நினைவூட்டினார் திரு வோங்.

"நாம் எத்தகைய நடவடிக்கைகள் எடுத்தாலும், சிங்கப்பூரில் அல்லது வேறு உலக நாட்டில் தீங்கிழைக்க விரும்பும் பயங்கரவாதிகளிடமிருந்து எப்போதும் புதிய மிரட்டல்களையும் புதிய உத்திகளையும் எதிர்நோக்குவோம்" என்றார் அவர்.

நாடாளுமன்றம் ஜூலை 19ம் தேதி கூடும்போது, உள்நாட்டுப் பாதுகாப்புத் துறை அண்மையில் எடுத்த நடவடிக்கைகள் பற்றிப் பேசப் போவதாகத் திரு வோங் தெரிவித்தார்.